# அசத்தினர் 'டொரண்டோ' சகோதரர்கள்

வளரும் கலைஞர்களை ஊக்குவிக்கும் விதத்தில் திருமலை - திருப்பதி தேவஸ்தான தகவல் மையம் சார்பில் ஒரு அரிய இசை நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது.

இந்நிகழ்ச்சியில் பாடிய 'டொரண்டோ' சகோதரர்கள் அஸ்வின், ரோஹின் இருவருமே அபாரமாகப் பாடினர்.

நிகழ்ச்சியின் எடுப்பே கானடா (ஆதி) வர்ணத்தில் களை கட்டி விட்டது. நல்ல லயஞானம் பாராட்டும்படி இருந்தது. தொடர்ந்த 'ஸ்ரீ மஹா கணபதி' (கௌள - மிச்ரசாபு - ஸ்ரீ தீட்சிதர்) கிருதியின் ஆழம் - ஜீவன் ததும்பிய சிட்டைஸ்வரம் பலே ஜோர்.

ரவிச்சந்திரிகா ராகத்தில் திரவதி சுகதாவின் கல்பனா ஸ்வரங்கள் கச்சிதம்.

நிகழ்ச்சியில் புதிதாக கேட்ட கீர்வாணி மற்றும் கானடா ராகத்தில் இவர்களுடைய குரு இசை மேதை எஸ்.ஆர்.ஜானகிராமன் மெட்டமைத்த அன்னமய்யா பாடல்கள் மிக அருமை.

பிரதான தோடி ராகத்தின் சாரத்தை அளவாகப் பாடி பருகக் கொடுத்த பாங்கு சபாஷ் போட வைத்தது.



அஸ்வின்-ரோஹின்.

குரல்கள் இணைந்து சுருதி சுத்தம், மென்மையுடன் ஆழமாக அனுபவித்து பாடினர்.

கனடாவில் வாழ்ந்து வரும் இந்த இரு இசைக் கலைஞர்களில் அஸ்வின் இன்ஜினியரிங் பி.எச்.டி., படிப்பும், ரோஹின் பயோமெடிகல் பட்டப்படிப்பும் படிப்பவர்.